1972 மார்ச் 9]

திரு. என். கே. பழனிசாமி : இந்த ரோடு தேசியப் பாதுகாப்பு முக்கியத்துவம் வாய்ந்த ரோடு ஆக இருப்பதால் இந்தச் செலவு பூராவையும் மத்திய அரசாங்கமே ஏற்றுக் கொள்ள வேண்டுமென்று மாநில அரசு வற்புறுத்தி இருக்கிறதா ?

மாண்புமிகு திரு. எஸ். ஜே. சாதிக் பாட்சா : மத்திய சர்க்கார் ஏற்றுக்கொள்ள வேண்டுமென்றுதான் நான் கருதுகிறேன்.

திருமதி த. ந. அனந்தநாயகி : வரவு செலவுத் திட்டத்திலே பாம்பன் பிரிட்ஜுக்கும் 5 கோடி ரூபாய் ஒதுக்கப்பட்டு இருக்கிறது. அதோடு இந்தத் திட்டத்தையும் சேர்த்துவிட்டால் இரண்டையும் முடிப்பது சுலபமாக இருக்குமே. எனவே அதற்கும் ஏதாவது நடவடிக்கை எடுக்கப்பட்டிருக்கிறதா ?

மாண்புமிகு திரு. எஸ். ஜே. சாதிக் பாட்சா : பட்ஜெட்டிலே இந்தப் பாலத்தைப் பற்றித்தான் குறிப்பிடப்பட்டிருக்கிறது. சாலைப் பணிகள் நடைபெற்று வருகின்றன.

திருமதி த. ந. அனந்தநாயகி : 5 கோடி ரூபாய் பட்ஜெட்டிலே ஒதுக்கப்பட்டிருப்பது இந்த இரண்டுக்கும் சேர்ந்ததா என்று அறிய விரும்புகிறேன்.

மாண்புமிகு திரு. எஸ். ஜே. சாதிக் பாட்சா : சேர்த்துத்தான்.

Overbridge near Jamalia

*393 *Q.*—Dr. H. V. HANDE : Will the Hon. the Minister for Public Works be pleased to state—

(*a*) whether the overbridge near Jamalia at Perambur has been closed for traffic a few years ago; and

(*b*) if so, the reasons therefor?

மாண்புமிகு திரு. எஸ். ஜே. சாதிக் பாட்சா . (அ) இல்லை.

(இ) இக் கேள்விக்கு இடமில்லை.

Pine-apple processing factory in Kanyakumari district

* 394 *Q.*—Thiru J. JAMES : Will the Hon. the Minister for Co-operation be pleased to state—

(*a*) whether the Government received any representation, **dated 25th June 1971, to start a pine-apple processing unit** in the Co-operative Sector at Kulaseharam in Kanyakumari district; and

(*b*) if so, the action taken thereon?

[1972 மார்ச் 9

மாண்புமிகு திரு. சி. பா. ஆதித்தனார் : (அ) & (இ) அன்னாசிப் பழம் பதனிடும் தொழிற்சாலை கன்னியாகுமரி மாவட்டத்திலே மார்த்தாண்டம் என்ற இடத்தில் தொடங்குவது என்று முடிவு செய்யப்பட்டிருக்கிறது.

திரு. ஜே. ஜேம்ஸ் : தலைவர் அவர்களே, இந்த அன்னாசிப்பழம் பதனிடும் தொழிற்சாலையைத் தொடங்குவதற்கு அனுமதி எப்பொழுது வழங்கப்பட்டது ? அதற்காக எவ்வளவு தொகை வழங்கப்பட்டது ? அரசாங்கத்திலிருந்து அனுமதிக்கப்படும் பணத்தை வாங்க கூட்டுறவு வங்கி அனுமதியளிக்கவில்லை என்று கூறப்படுகிறதே அது உண்மையா ?

மாண்புமிகு திரு. சி. பா. ஆதித்தனார் : தலைவர் அவர்களே, வழக்கப்படி கட்டடம் இவைகள் எல்லாம் தொடங்கினால், அந்தச் சமயத்தில் பணத்தைக் கொடுப்பதற்கு அனுமதியளிக்கப்படும்.

திரு. ஆர். பொன்னப்ப நாடார் : இப்பொழுது அங்கே நிர்வாகக் குழு இயங்கிக்கொண்டிருக்கிறதா ? நிர்வாகச் செலவு களுக்குப் பணம் ஒதுக்கப்பட்டிருக்கிறதா ? அதன் விவரங்களை அமைச்சர் அவர்கள் தெரிவிப்பார்களா ?

மாண்புமிகு திரு. சி. பா. ஆதித்தனார் : ஏற்கனவே இயங்கிக் கொண்டிருக்கிற கற்குளம், விளவங்கோடு கூட்டுறவு விற்பனைக் கழகத்திற்குப் பணம் அனுமதிக்கப்பட்டு அவர்களால் இந்தத் தொழிற்சாலை தொடங்கப்பட இருக்கிறது.

திரு. ஆர். பொன்னப்ப நாடார் : இதற்கு ஏதாவது பணம் கொடுக்கப்பட்டிருக்கிறதா ? ஏதாவது பணம் செலவழிக்கப் பட்டிருக்கிறதா என்பதை அறிய விரும்புகிறேன்.

மாண்புமிகு திரு. சி. பா. ஆதித்தனார் : தலைவர் அவர்களே, பணம் அனுமதிக்கப்பட்டிருக்கிறது. எவ்வளவு செலவழிக்கப் பட்டிருக்கிறது என்ற விவரம் என்னிடத்தில் இல்லை.